**தலைப்பு 17 – பாராளுமன்ற முதல்வர் அலுவலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

தலைப்பு - 17 பாராளுமன்ற முதல்வர் அலுவலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 யூன் 02 ஆம் திகதி முதல்வர் அலுவலகத்தின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த ஏற்பாடும் செலவும்**

அலுவலகத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 30.85 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 29.18 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அலுவலகத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 1.67 மில்லியன் அதாவது 5.4 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழும் | 28.65 | 28.20 | 0.45 | 1.5 |
| மூலதன | 2.20 | 0.98 | 1.22 | 55.5 |
| மொத்தம் | 30.85 | 29.18 | 1.67 | 5.4 |

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அலுவலகத்திற்குரிய விடய இலக்கம் 01701 இன் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 2.13 | 1.08 | 0.93 | 1.45 | 4.00 | 2.60 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

அலுவலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டுநிதி கணக்கு மீதிகள் ரூபா 159,700 ஆக இருந்தது.

## 2.4 கணக்காய்வு அவதானிப்புகள்

பாராளுமன்ற முதல்வர் அலுவலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

## 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

அலுவலகத்தினால் கீழே குறிப்பிடப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (i) | பிணைப்பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) | பேணப்பட்டிருக்கவில்லை |
| (ii) | கொள்வனவுக் குழுவினதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினதும் வருகைப் பதிவேடு | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.11.2 ஆம் வழிகாட்டி | பேணப்பட்டிருக்கவில்லை |
| (iii) | கொள்வனவுக் குழுக்கூட்ட அறிக்கை | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.11.3(அ) ஆம் வழிகாட்டி | பேணப்பட்டிருக்கவில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| (iv) | கேள்வி கோரல் பதிவேடு | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.2.1 ஆம் வழிகாட்டி | பேணப்பட்டிருக்கவில்லை. |

**3.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று**

01701 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 128,800 ஆக இருந்ததுடன் அந் நிலுவை மீதிகள் 06 மாதம் முதல் 12 மாதம் வரையிலான காலமாகக் முன்கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்த நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு அலுவலகம் தவறியிருந்தது.

**3.3 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**3.3.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அலுவலகத்தினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அந்த அறிக்கை 2016 மே 31 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

முதல்வரின் செயலாளரின் இணைப்புச் செயலாளர் பதவியை ஏற்படுத்துவதற்காக 2015 ஆகஸ்ட் 05 ஆந் திகதிய DMS/1006 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் மூலம் அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும், 2015 சனவரி மாதம் முதல் முதல்வரின் செயலாளரின் இணைப்புச் செயலாளராக அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் II ஆம் வகுப்பின் பெண் உத்தியோகத்தர் ஒருவருக்கு நியமனம் வழங்கப்பட்டு 2015 சனவரி 16 ஆந் திகதி முதல் யூலை மாதம் வரை கூட்டுமொத்தமாக ரூபா 626,901 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**3.5 மனித வள முகாமைத்துவம்**

**(அ) அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையும் உள்ளபடியான பதவியணியும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 03 | 03 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 01 | 01 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 10 | 08 | 02 |
| (iv) | ஆரம்ப நிலை | 16 | 14 | 02 |
| (v) | ஏனையவை (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 03 | 02 | 01 |
| | மொத்தம் | 33 | 28 | 05 |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 05 வெற்றிடங்கள் காணப்பட்டபோதும், தயாரிக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தாது சேமிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த சேமிப்பு தொடர்பில் பதவியணியினர்கள் வெற்றிடமாகக் காணப்பட்டமை தாக்கமளித்திருக்கவில்லை.

**(ஆ) முறையற்ற வகையில் வெளித்தரப்பினர்களுக்கு விடுவிக்கப்பட்ட மனித வளங்கள்**

முதல்வர் அலுவலகத்தில் சேவையில் ஈடுபட்டிருந்த கூட்டிணைந்த சேவைக்குரிய சாராதியொருவர் சனாதிபதி செயலகத்திற்கு கூட்டிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரமின்றி முதல்வரின் செயலாளரினால் 2005 திசெம்பர் 05 ஆந் திகதி விடுவிக்கப்பட்டிருந்தார். 2007 ஆம் ஆண்டு முதல் 2015 சனவரி மாதம் வரை பாராளுமன்ற வளாகத்தில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற உத்தியோகத்தர்களுக்குச் செலுத்தப்படுகின்ற உபசரிப்புப் படிகள், சபை அமர்வுப் படிகள், கடமைப் படிகள், 30 சதவீத கொடுப்பனவு மற்றும் ஏனைய படிகளாக ரூபா 1,757,484 தொகையும், அந்தக் காலப்பகுதியில் சேமிக்கப்பட்ட விடுமுறைகளுக்காக ரூபா 67,675 தொகையுமாக ரூபா 1,825,159 கூட்டுமொத்தமாக பாராளுமன்றத்தின் முதல்வர் அலுவலகத்தினாலும் செலுத்தப்பட்டிருந்தது. 2007 யூலை மாதம் முதல் 2014 திசெம்பர் மாதம் வரை ரூபா 2,291,000 கூட்டுத்தொகையான படிகள் சனாதிபதி செயலதகத்தினாலும் செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த உத்தியோகத்தர் மேற்குறிப்பிட்ட காலப்பகுதிக்காக இரண்டு நிறுவனங்களிலிருந்தும் சம்பளம் மற்றும் படிகளைப் பெற்றிருந்ததுடன் 2015 சனவரி 09 ஆந் திகதி முதல் சனாதிபதி செயலகத்திற்கோ அல்லது பாராளுமன்ற முதல்வர் அலுவலகத்திற்கோ சேவைக்கு அறிக்கையிடாதிருந்ததுடன் 2015 பெப்ரவரி 02 ஆந் திகதி முதல் வேலை நிறுத்தம் செய்யப்பட்டிருந்தார்.